1

## சிறப்பு வரைபடம் 1.9
## பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் முன்னேற்றம்

இலங்கையின் நான்கு ஆண்டுகால பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதிக்கு 2023 மாச்சில் ஒப்புதலளிக்கப்பட்டு, வெற்றிகரமாகத் தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றது. பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டை மீட்டெடுத்தல், படுகடன் உறுதிப்பாடு, வெளிநாட்டு தாங்கிருப்புக்களை மீளக் கட்டியெழுப்புதல், நிதியியல் துறையின் தாக்குபிடிக்கக்கூடிய தன்மையைப் பாதுகாத்தல், ஆளுகையை வலுப்படுத்தல் மற்றும் வளர்ச்சி சார்ந்த சீர்திருத்தங்களை மேம்படுத்துதல் போன்றன இந்நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்களாகும்.

விரிவாக்கப்பட்ட நாணய நிதியத்தின் கீழ் சிறப்பு எடுப்பனவு உரிமைகள் 2.286 பில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 3 பில்லியன்) தொகையை வழங்குவதற்கு பன்னாட்டு நாணய நிதியம் உறுதியளித்தது. இதுவரை நான்கு மீளாய்வுகளை வெற்றிகரமாக நிறைவுசெய்ததனூடாக, இலங்கை சிறப்பு எடுப்பனவு உரிமைகள் 1.27 பில்லியனைப் (ஐந்து தொகுதிகளாக, ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1.74 பில்லியன்) பெற்றுள்ளது. கணிசமானளவிலான இறைத் திரட்சி, மேம்படுத்தப்பட்ட பணவீக்க பெறுபேறுகள், வலுவான ஒதுக்கு நிலைமை, மற்றும் ஆளுகை மற்றும் செலவைப் பிரதிபலிக்கக்கூடிய விலையிடலில் மேற்கொள்ளப்பட்ட கட்டமைப்புசார் சீர்திருத்தங்கள் போன்றவற்றை இதுவரையிலான அடைவுகள் உள்ளடக்குகின்றன. எதிர்வரும் மாதங்களில் ஐந்தாவது மற்றும் ஆறாவது மீளாய்வுகள் நிறைவடைந்தவுடன், இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆறாவது மற்றும் ஏழாவது தொகுதிகளையும் பெறுவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் ஒட்டுமொத்த நிகழ்ச்சித்திட்டமும் 2027இல் நிறைவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபையானது துரித நிதியிடல் சாதனத்தின் கீழ் அவசரகால நிதியிடலுக்கு ஒப்புதலளித்து, இலங்கை சிறப்பு எடுப்பனவு உரிமைகள் 150.5 மில்லியனை (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 206 மில்லியன்) உடனடியாக அணுகுவதற்கு அனுமதித்தது. டித்வா புயலின் கடுமையான தாக்கங்களால் எழுந்த அவசரத் தேவைகளை நிவர்த்திசெய்வதற்கும், அதேவேளை பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டைப் பேணுவதற்கும் துரித நிதியிடல் சாதனம் உதவியது.

### பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி திட்டத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது




1 2025 திசெம்பரில் நிறைவேற்றப்படவேண்டிய இத்திட்டத்தின் ஐந்தாவது மீளாய்வு *டித்வா புயலினால்*, அதன் பொருளாதாரத் தாக்கம் மற்றும் பொருத்தமான கொள்கைப் பதிலிறுப்பு போன்றவற்றின் மதிப்பீடொன்றை வழங்குவதற்காகப் பிற்போடப்பட்டது.